பக்கங்கள்: 07

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 09 செவ்வாய்க்கிழமை 24.11.2020 கதிர் 250

## 27 இலங்கையர்கள் ரஷ்யாவில் கைது

போலித் தகவல் வழங்கி ரஷ்யா சென்ற 27 இலங்கையர்கள் அந்நாட்டு பாதுகாப்புப் பிரிவினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் தகவலை ரஷ்யாவுக்கான இலங்கைத் தூதரகம் வெளியிட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் இந்த வருடம் ரஷ்ய நாட்டிற்கு சென்ற இலங்கையர்களாவர். இந்த 27 பேரில் 17 பேர் 2

# அரசின் அநீதிகளை - கொடுஞ்செயல்களை நாம் பார்த்துக்கொண்டு இருக்கவேமுடியாது



### எதிர்க்கட்சி பலமிக்கதாக இருக்க வேண்டும் எனவும் சஜித்துடனான சந்திப்பின் பின் சந்திரிகா தெரிவிப்பு

அரசின் முறைகேடுகளை - அநீதிகளை - கொடுஞ் செயல்களை - அக்கிரமங்களை எம்மால் தொடர்ந்து பார்த்துக்கொண்டிருக்க முடியாது. விரைவில் இதற்கெல்லாம் ஒரு முடிவு வேண்டும்; தீர்வு வேண்டும். அதேவேளை, எதிர்க்கட்சியும் பலமாக இருக்க வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க.

நாட்டு மக்கள் வழங்கிய ஆணைக்கு மாறாகவே இந்த அரசு செயற்படுகின்றது. கொரோனாவின் மூன்றாவது அலை நாட்டில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்த இந்த அரசின் பொறுப்பற்ற செயற்பாடுகளே பிரதான காரணமாகும் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். 2

## ரிஷாத்தைக் கொலைசெய்ய திரைமறைவில் சதித்திட்டம்!

### உடன் விசாரணைக்கு சஜித் அணி வலியுறுத்து



கொழும்பு,நவ.24

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனைப்படுகொலைசெய்யத்திட்டங்கள்முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவை கருணா அம்மானிடம் வழங்கப்பட்டுள்ளன. 2

## வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இளைஞர் படகுடன் தமிழகத்தில் கரையொதுங்கினார்





யாழ். வடமராட்சி, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் படகுடன் தமிழகத்தில் கரையொதுங்கியுள்ளார். 2

# நினைவேந்தல் உரிமையை தட்டிப் பறிக்கவே முடியாது!

### கோட்டா அரசின் அடாவடிக்கு எதிராக சந்திரிகா அம்மையார் போர்க்கொடி

**கொழும்பு, நவம்பர் 24**

**இலங்கையில் போரில் இறந்த தங்கள் உறவுகளை நினைவுகூர மூவின மக்களுக்கும் உரிமையுண்டு. அதில் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என்ற வேறுபாடுகள் இருக்கவேகூடாது. எனவே, நினைவேந்தல் உரிமையைஎவரும் தட்டிப் பறிக்க முடியாது.**

**- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.** 2



## வடக்கில் மாணவர்களின் வருகை இன்றும் 45வீதத்தை எட்டவில்லை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.25

கொரோனா அச்சத்தின் பின்பு நேற்று மீண்டும் ஆரம்பித்த பாடசாலையில் வடக்கு மாகாணப் பாடசாலைகளில் மாணவர்களின் வரவு நேற்றைய தினமும் 45 வீதத்தை தொடவில்லை என்றே அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டத்தின் 12 கல்வி வலயங்களிலும் உள்ள மாகாணப் பாடசாலைகளில் தரம் 6 முதல் உயர்தரம் வரையில் மொத்தமாக ஒரு லட்சத்து 42 ஆயிரத்து 855 மாணவர்கள் கல்வி கற்கும்போதும் நேற்று முன்தினம் 61ஆயிரத்து 601மாணவர்கள் மட்டுமே பாடசாலைக்கு சமுகமளித்தனர். 2

## பிரேதப் பெட்டிக்கான பணத்தைக் கூட செலுத்த இந்த அரசுக்கு வக்கில்லை

### கொரோனா நிலை தொடர்பில் ஜே.வி.பி. விளாசல்



கொரோனா வைரஸ்தொற்றால் உயிரிழந்தவர்களின் பிரேதப்பெட்டிகளுக்கான செலவைக்கூட செலுத்த முடியாத நிலையில் இந்த அரசு உள்ளது.

- இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்களின் 2

## கிளிநொச்சியில் பல பகுதிகளில் தனிமைப்படுத்தல் நடவடிக்கை!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,நவ.24

கிளிநொச்சியில் திருவையாற்றைத் தொடர்ந்து பாரதிபுரம், கிருஷ்ணபுரம் பகுதியிலும் 27 பேர் தனிமைப்படுத்தப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். 2

### மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கு:

## பிள்ளையானுக்குப் பிணை!

### ஏனைய 5 சந்தேகநபர்களும் விடுவிப்பு

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவநேசத்துரை சந்திரகாந்தன் மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தால்இன்று பிணையில்விடுவிக்கப்பட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட வழக்கில், பிள்ளையான் எனப்படும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் சந்தேகத்தின் பேரில் 2015ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

பிள்ளையானுக்குப் பிணை வழங்க சட்டமா அதிபர் ஒப்புதல் அளித் 2

## மாவீரர் நினைவேந்தலுக்குத் தடை கோரும் யாழ். பொலிஸின் மனு மீண்டும் ஒத்திவைப்பு

### நாளை வருகின்றது விசாரணைக்கு

மாவீரர் நாள் நினைவேந்தலுக்குத் தடை விதிக்கக் கோரும் யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸாரின் விண்ணப்பம் மீதான விசாரணை நாளை வரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உள்ளிட்ட இடங்களில் நினைவேந்தலை நடத்துதற்குத் தடை கேட்டும் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், எம்.ஏ.சுமந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சட்டத்தரணிகளான விஸ்வலிங்கம் மணிவண்ணன், க.சுகாஷ், யாழ். மாநகர சபை உறுப்பினர்களான வரதராஜா பார்த்தீபன், மயூரன் உள்ளிட்ட 37 பேருக்குஎதிராக தடைக்கட்டளைவழங்குமாறும் இந்த விண்ணப்பம் 2

## ரிஷாத்தைக் கொலைசெய்ய ...................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாமல் குமார வினால் முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்கள் தொடர்பில் உடனடியாக அரசு விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சஹ்ரானின் தாக்குதல் விடயத்தில் ஒரு புள்ளியாகப் பார்க்கப்பட்ட நாமல் குமார நேற்று ஒரு காணொலியை வெளியிட்டுள்ளார். அதிலே பல சர்ச்சைக்குரிய விடயங்கள் தெரிவிக்கப்பட்டன. ரிஷாத் பதியுதீனைப் படுகொலை செய்ய 15 கோடி ரூபா ஒப்பந்தத்தில் திட்டமொன்றை கருணா அம்மானுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கருணா அம்மான் அரசுடன் தொடர்புபட்டவர். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வேண்டிய ஒரு நபர். ஆகவே, இந்த விடயம் தொடர்பில் உடன் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்கு முன்னர் நாமல் குமார இப்படித்தான் காணொலி, சி.டி. என்பனவற்றை வெளியிட்டார். ஆகவே, இது தொடர்பில் உடனடியாக விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்.

பிரான்ஸிலுள்ள துஸார பீரிஸ் என்கின்ற நபரும் இதனுடன் தொடர்புபட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் இவ்வாறு தொடர்புபட்டிருந்தால் அவரை உடனடியாக நாட்டுக்கு அழைத்து வந்து விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும். - என்றார்.

## நினைவேந்தல் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நல்லாட்சியில் இருந்த நினைவேந்தல் உரிமை, கோட்டாபய அரசின் ஆட்சிக் காலத்தில் கிடைக்காது என்பது தமிழர்களுக்கு ஏற்கனவே தெரிந்த விடயம்தான் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த பின்னர் வடக்கு, கிழக்கில் தமிழர்கள் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்தத் தொடர்ந்து தடை விதிக்கப்பட்டு வருகின்றமை தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போரில் இறந்த உறவுகளை நினைவுகூர அனைத்து இன மக்களுக்கும் சமவுரிமை வழங்கப்பட வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவுகளுக்கு நீதி கிடைக்க வேண்டும். போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பரிகாரம் வழங்கப்பட வேண்டும். இதில் நான் உறுதியாக இருக்கின்றேன் - என்றார்.

## அரசின் அநீதிகளை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாட்டினதும் மக்களினதும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவருடன் விரிவாகக் கலந்துரையாடியுள்ளேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கும் இடையில் நேற்று திடீர் சந்திப்பு நடைபெற்றது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின் பின்னர் கருத்து வெளியிடும்போதே சந்திரிகா மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படி சந்திப்பு தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்ததாவது:-

அண்மைக்கால அரசியல், சமூக மற்றும் பொருளாதார விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

கொரோனா வைரஸ் பரவலின் அச்சுறுத்தல் மற்றும் சவால்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

அதேபோன்று, இலங்கைக்குப் பொருத்தமான தேசிய சுற்றாடல் கொள்கையொன்று வகுக்கப்பட வேண்டியதன் தேவை குறித்தும் பேசப்பட்டது.

உலகம் எதிர்கொண்டுள்ள பருவகால மாற்றம் குறித்தும் இதன்போது கருத்துக்கள் பரிமாறப்பட்டன - என்றார்.

## கிளிநொச்சியில் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
திருவையாறில் இடம்பெற்ற மரண வீட்டிற்கு கொழும்பில் இருந்து வந்த ஒருவரால் 43 குடும்பங்களைச் சேர்ந்த 169 பேர் தனிமைப்படுத்தப்பட்டமையோடு மேலும் பலரை தேடும் முயற்சி சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிலையில் காய்ச்சல் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவரிற்கு கொரோனா உறுதிசெய்யப்பட்டதனையடுத்து தற்போது மேலும் 8 குடும்பங்களைச் சேர்ந்த 27 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்ட அனைவரிற்கும் இன்று பி.சி.ஆர். பரிசோதனைகள் இடம்பெறுகின்ற நிலையில் இதன் பெறுபேறுகள் இரவு தெரிய வரும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## வல்வெட்டித்துறை ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
40 குதிரைவலு கொண்ட இயந்திரம் பொருத்தப்பட்ட குறித்த படகைத் தமிழகக் கரையோரக் காவல்படையினர் கண்ணுற்று விசாரித்தபோது மீன்பிடிக்க வந்தபோது திசைமாறி தமிழகப் பகுதிக்குள் வந்துவிட்டார் என்று அவர் தெரிவித்துள்ளார்.

தான் வல்வெட்டித்துறை, ஆதிகோயிலடி பகுதியைச் சேர்ந்த விஜயமூர்த்தி கலைச்செல்வன் (வயது 29) என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, குறித்த இளைஞரைக் காணவில்லை என்று வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் அவரது குடும்பத்தினரால் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.




## பிரேதப் பெட்டிக்கான......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உடல்களை வைப்பதற்கான பிரேதப்பெட்டிகளுக்கான பணத்தை அதிகாரிகள் உயிரிழந்தவர்களின் குடும்பங்களிடமிருந்து அறவிடுகின்றனர். கொரோனாவால் உயிரிழந்தவர்களின் பிரேதப் பெட்டிகளுக்கான செலவைக்கூட செலுத்த முடியாத நிலையில் இந்த அரசு உள்ளது.

கொவிட் 19 சுகாதார நல சமூகப் பாதுகாப்பு நிதியத்தை உயிரிழந்தவர்களின் இறுதிச் சடங்குகளுக்காகப் பயன்படுத்துமாறு அரசிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

உயிரிழந்தவர்களில் அநேகமானவர்கள் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்கள். அவர்கள் கொரோனா வைரஸால் கடும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். அவர்களிடமிருந்து பிரேதப் பெட்டிகளுக்கான பணத்தை அறவிடுவது எந்த வகையில் நியாயமானது? எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

## வடக்கில் மாணவர் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்த நிலையில் இன்றைய தினம் கிளிநொச்சி மாவட்டத்தின் எந்தப் பாடசாலையும் இயங்காத காரணத்தினால் தற்கு வெளியில் எஞ்சிய ஒரு லட்சத்து 25 ஆயிரத்து 749 மாணவர்கள் கல்வி கற்கும்போதும் இன்றைய தினம் ஆக 56 ஆயிரத்து 67 மாணவர்கள் மட்டுமே பாடசாலைக்கு சமுகமளித்தனர்.

இவ்வாறு வருகை தந்த மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இது 44.59 வீதம் என மாகாண கல்வி அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மாவீரர் நினைவேந்த..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செய்யப்பட்டிருந்தது.

'விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து உயிரிழந்த உறுப்பினர்களை நினைவுகூருவதற்காக நவம்பர் 21ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி மாவீரர் நாள் கடைப்பிடிக்கப்படுகின்றது. எனவே, மாவீரர் நாள் நிகழ்வுகளைத் தடுக்கும் வகையில் கட்டளை வழங்கவேண்டும்' என்று பொலிஸார் விண்ணப்பத்தில் கேட்டிருந்தனர்.

அத்துடன் கொரோனாத் தனிமைப்படுத்தல் கட்டளைச் சட்டத்தையும் பொலிஸார் விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருந்தனர்.

பிரதிவாதிகளில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் (நாடாளுமன்ற உறுப்பினர்), சட்டத்தரணிகளான விஸ்வலிங்கம் மணிவண்ணன், கனகரட்ணம் சுகாஷ் உள்ளிட்டோர் கடந்த வெள்ளிக்கிழமை மன்றில் முன்னிலையாகி பொலிஸாரின் விண்ணப்பத்துக்கு கடுமையான ஆட்சேபனையை முன்வைத்தனர்.

இந்த வழக்கு இன்று காலை மன்றில் விசாரணைக்கு வந்தபோது, வழக்குத் தொடுநர் சார்பில் மூத்த பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் பிரபாகரன் குமாரரட்ணம் பிற்பகல் முன்னிலையாவார் என்று அரச சட்டவாதியால் அறிவிக்கப்பட்டதற்கு அமைய வழக்கு பிற்பகல் வரை ஒத்தி வைக்கப்பட்டது.

பிற்பகல் 3 மணிக்கு வழக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டபோதும் கால நிலை சீரின்மை காரணமாக மூத்த பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் நாளை காலை மன்றில் முன்னிலையாவார் என்று அரச சட்டவாதி சயாதவன் மன்றுக்கு அறிவித்தார். அதனால் குறித்த வழக்கு நாளை முற்பகல் 11 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

## உணவகத்தில் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள, உணவகமொன்றிலிருந்து சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்ட நபர், உணவகத்தில் பணியாற்றுவதற்காக, மூன்று தினங்களுக்கு முன்னர், தென்னிலங்கையிலிருந்து, யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தவர் என தெரிவிக்கப்படுகின்றது.

சடலம் மீட்கப்பட்ட உணவகத்தில் கடமையாற்றும், பணியாளர்கள் வெளியேறுவதற்குப் பொலிஸாரால் தடை விதித்துள்ளனர். பொலிஸாரின் தீவிர கண்காணிப்புக்குள் உணவகம் கொண்டுவரப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்ட நபருக்கு நீரிழிவு நோய் இருப்பதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

## 27 இலங்கையர்கள்.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தற்போது சிறைத்தண்டனையை நிறைவு செய்துள்ளனர்.

அவர்கள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்ட நிலையில் மேலும் 10 பேர் தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள 10 பேருக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளமையினால் அவர்கள் பல்வேறு நகரங்களில் உள்ள தடுப்பு நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என தூதரகம் சுட்டிக்காட்டியுள்ளது.

## பிள்ளையானுக்கு...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ததன் பின்னரே இன்று பிணை வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த வழக்கில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஏனைய ஐவருக்கும் பிணை வழங்கப்பட்டுள்ளது.

2005ஆம் ஆண்டு நத்தார் ஆராதனையின்போது, மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

இதையடுத்து, ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கில் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் எனப்படும் சிவநேசத்துரை சந்திரகாந்தன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஸ்ணானந்தராஜா, கஜன் மாமா எனப்படும் கனகநாயகம் மற்றும் இராணுவப் புலனாய்வு உத்தியோகஸ்தரான எம்.கலீல், முன்னாள் இராணுவச் சிப்பாயான மதுசிங்க ஆகியோர் சந்தேகத்தின் பேரில் 2015ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்டு தொடர்ந்து தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.

2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் பிள்ளையான் நாடாளுமன்றுக்கு தெரிவுசெய்யப்பட்டமையைத் தொடர்ந்து, விடுதலைக்கான கோரிக்கையை அவரே நாடாளுமன்றத்தில் முன்வைத்து வந்தார். இந்த நிலையில், மட்டக்களப்பு மேல் நீதிமன்ற விசேட நீதிபதி டி.சூசைதாசன் முன்னிலையில் பிள்ளையான் உள்ளிட்ட 6 சந்தேகநபர்கள் இன்று முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன்போது இவர்கள் அனைவரும் சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு வெளிநாடு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த பிள்ளையானுக்கும் அவரின் சகாக்களுக்கும் பிணை வழங்க முடியுமாயின், குறித்த சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனையோரும் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் மனைவி சார்பில் மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# மாவீரர் நாள் எதற்காக?

*"போரில் உயிர் நீத்த தமது உறவுகளை நினைவேந்தத் தமிழ் மக்களுக்கு உரிமை இருக்கின்றது. அது அவர்களின் சொந்த உரிமை. அதை அவர்கள் ஏதோவொரு வழியில் சாதித்துக் காட்டுவார்கள். அதை ஜனாதிபதியோ அல்லது அரசோ அல்லது வேறு ஆள்களோ தடுத்து நிறுத்த முடியாது."* – இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி. கூறியிருக்கின்றார்.

இதற்கு வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனா பதில் தந்திருக்கின்றார்.

*"இந்த நாட்டில் விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பு. எனவே அவர்களை இங்கு நினைவு கூர அனுமதி இல்லை.*

*"விடுதலைப் புலிகள் இயக்கத்தை வெளிநாடுகள் தடை செய்தி ருந்தாலும் அங்கு வாழும் தமிழர்கள் மாவீரரர் நாளைப் பகிரங்கமாக நினைவு கூருகின்றனர். அதற்காக அவர்களுக்கு நாம் இங்கு அனுமதி வழங்க முடியாது.*

*"இங்கு மாவீரர் நிகழ்வை நடத்துவதற்குக் கடந்த நல்லாட்சியில் அனுமதி வழங்கப்பட்டிருந்தமை படு முட்டாள்தனமாகும். அதற்கு நாம் இடம் கொடுக்க முடியாது"* – இப்படிக் கூறியிருக்கின்றார் தினேஷ் குணவர்த்தனா.

ஆனாலும், அவரது கூற்றின் ஊடே சில உண்மைகள் புலப்படுவதை நாம் சுட்டிக்காட்டவும் ஆராயவும் வேண்டி இருக்கின்றது.

முதலாவது – இலங்கையைப் போல விடுதலைப் புலிகளைத் தடை செய்திருக்கும் வெளிநாடுகள், தத்தம் நாட்டில் புலிகளை நினைவு கூரும் நிகழ்வுகளைப் பகிரங்கமாகத் தமிழ் மக்கள் நடத்துவதற்கு அனுமதிக்கின்றார்கள். இதற்குக் காரணம் உண்டு. விடுதலைப் புலிகள் இயக்கம் செயற்படுவது வேறு. அந்த இயக்கத்தில் இருந்தும், இல்லாமலும் போரில் கொல்லப்பட்டோரை அவர்களின் உறவுகள் நினைவு கூருவது என்பது வேறு.

இந்த வித்தியாசத்தைப் புரிந்து கொள்ளும் மனித நாகரிகப் பண்பியல்பு அந்த நாடுகளிடம் தாராளமாக உள்ளது. பேரினவாத வெறித்தனத்தில் பேயுருக் கொண்டு நிற்போரிடம் அது இல்லை. அதனால் அங்கு நினைவேந்தலுக்குக் கட்டுமட்டில்லா தாராள அனுமதியும்; ஒத்துழைப்பும், இங்கு காட்டுமிராண்டித்தனமான கெடுபிடியும் அடக்குமுறையும்.

ஒருவர் 'பயங்கரவாதி'யாக இருக்கலாம். சுதந்திரப் போராட்ட வீரனாக இருக்கலாம். காட்டிக் கொடுத்த காக்கை வன்னியனாகக் கூட இருக்கலாம். ஆனால் உயிரிழந்த பின்னர் அவரின் பூதவுடலை மதிப்பதுதான் மனித மாண்பு. தன்னுடன் போரிட்டு மடிந்த எதிரியான எல்லாள மன்னனுக்குக் கூட அந்தப் பெரும்தன்மையைக் காட்டித் தான் உயர்ந்தான் துட்டகைமுனு. ஆனால் நவீன துட்டகைமுனுக்களிடம் அந்தப் பண்பியல்பு கூட இல்லாத பேரினவாத வெறியைத் தான் நாம் பார்க்கிறோம்.

வெளிநாடுகள் பலவும் இந்த விடயத்தை – உயிரிழந்த உறவுகளின் நினைவேந்தல் என்ற நிகழ்வை – மனித நாகரிகக் கண்ணோடுதான் நோக்குகின்றன. ஆனால் பேரினவாதத்தின் முன்னால் அந்த மனித நாகரிகம் படுத்து விட்டது. அவ்வளவுதான்.

அடுத்தது –முன்னைய நல்லாட்சி அரசின் காலத்தில் நினைவேந்தலுக்கு அனுமதிக்கப்பட்டது என்ற அமைச்சரின் கருத்து.

அது உண்மைதான். அது எமக்கு ஒரு தெளிவான செய்தியைச் சொல்கின்றது. ஆட்சியாளர்கள் – அதிகாரத்தில் இருப்போர் – மாறினால், நாட்டின் 'பயங்கரவாதம்' என்ற சொல்லின் அர்த்தமும், விளக்கமும், பார்வையும், வியாக்கியானமும் கூட மாறுகின்றது. ஆகவே இந்தப் 'பயங்கரவாத' செயலுக்கு எதிரான நடவடிக்கையை எடுப்பது இலங்கையின் சட்டங்களும், பாதுகாப்புத் துறையினரும் அல்ல. அவர்களை வழி நடத்தும் அரசியல்வாதிகளின் முடிவுகள்தாம் என்பது துலாம்பரமாகின்றதுது.

எனவே, பயங்கரவாதத்துக்கு எதிரானது என்ற பெயரில் இலங்கையில் மேற்கொள்ளப்படும் இந்தச் சட்ட நடவடிக்கை வெறும் அரசியல் ரீதியான முடிவு மட்டுமே என்று அம்பலமாகின்றது.

மூன்றாவது – மாவீரர் தினம் என்பது யுத்தத்தில் உயிரிழந்த விடுதலைப் புலிகளை நினைவேந்துவதற்கு புலிகள் நிர்ணயித்த தினம். அந்தத் தினத்தில் அவர்களை நினைவு கூர்வது என்பது குற்றம்தானே என்ற வாதம் தெற்கினால் முன்வைக்கப்படுகின்றது. ஆனால் இதையொட்டி சில விடயங்கள் இருப்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

உலகளாவிய ரீதியில் யுத்தத்தில் இறந்தோரை நினைவு கூர்வது இந்தக் கார்த்திகை மாதத்தில்தான். அதற்கான பொப்பி மலர்கள் நினைவு நாள் நவம்பர் 11 இல் கொண்டாடப்படுகின்றது. அதையொட்டிய நிகழ்வுகள் இலங்கையிலும் கூட நவம்பர் மாதம் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமைகளில்தான் நடைபெறுகின்றன.

தமிழர்களுக்கும் கார்த்திகை மாதமே நினைவேந்தல் செய்யும் மாதமாகவும், வாரமாகவும், தினமாகவும் உள்ளது.

அடுத்து, இதனை இப்போது முன்னெடுப்போர் புலிகள் அல்லர். உயிரிழந்தவர்களின் உறவுகள்

அது மட்டுமல்ல. இன்னொரு முக்கிய விடயமும் உணடு. இலங்கை யுத்தத்தில் கொல்லப்பட்ட – அல்லது வலிந்து காணாமலாக்கப்பட்ட பின்னர் உயிரிழந்து விட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்ற – பல்லாயிரம் தமிழ் மக்களின் இறப்பு தினம் எதுவென்றே அவர்களது உறவுகளுக்குத் தெரியாது. அது பற்றிய விசாரணைகளை மூடி மறைத்து, உண்மைகள் அம்பலமாகாமல் தடுத்து, அவற்றை ஆழப் புதைந்து நிற்கின்றது சிங்களப் பேரினவாதம்.

அத்தகையோரும் ஏனையோரோடு சேர்ந்து தம் உறவுகளை தாமும் நினைவேந்தி அனுஷ்டிக்ககும் குறியீட்டுத் தினமாக – அடையாள நாளாக – இத்தினமே உள்ளது.

அதனால்தான் அத்தினத்தை அனுஷ்டிக்க, அத்தினத்தில் நினைவேந்தல் செய்ய இத்துணை போராட்டங்கள்.

# நினைவேந்தலைத் தடுத்தால் உயிரிழந்தோரின் முகங்கள் தமிழர்களின் மனங்களில் வேரூன்றும்!

## யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவிப்பு



அரசாங்கத்தால் தமிழர்களின் நினைவேந்தல் உரிமை மறுக்கப்படும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் உயிரிழந்தவர்களின் முகங்கள் தமிழ் மக்களின் மனங்களில் மிகவும் வலுவாக வேரூன்றும் என்பதை புரிந்துகொள்ளவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் கூறியவை வருமாறு –

மாவீரர்தின நிகழ்வுகள் தொடர்பான நீதிமன்றத் தீர்ப்பிற்கு நாம் மதிப்பளிக்கின்றோம். சர்வதேச பொறுப்புக்கூறல், நீதிக் கடப்பாடுகளின் கீழ் உயிரிழந்தவர்களுக்கு வணக்கம் செலுத்துதல் மற்றும் அவர்களை நினைவுகூருதல் என்பன ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

எமது நாட்டில் ஜனதா விமுக்தி பெரமுனவிற்கு (ஜே.வி.பி) அவர்களது தரப்பில் உயிரிழந்தவர்களை நினைவுகூருவதற்கு உரிமை இருக்கிறது என்றால், அந்த உரிமை தமிழ்மக்களுக்கும் இருக்கின்றது.

அரசாங்கத்தால் அந்த உரிமை மறுக்கப்படும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் உயிரிழந்தவர்களின் முகங்கள் தமிழ் மக்களின் மனங்களில் மிகவும் வலுவாக வேரூன்றும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். – என்றார்.

# சுகாதார முறைகளைத் தவறிய 465 பேர் இதுவரை கைதாகினர்!

முகக்கவசம் அணியாமை, சமூக இடைவெளிகளைப் பேணாமை தொடர்பில் இதுவரையில் 465 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப்பொலிஸ்மா அதிபர் அஜித்ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு ஒலிப்பதிவொன்றை வெளியிட்டுள்ள அவர் மேலும் கூறியவை வருமாறு –

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் 18 பொலிஸ் பிரிவுகள் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, அட்டுலுகம பகுதியில் 7 கிராமசேவகர் பிரிவுகளும் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. அதற்கமைய இந்த பகுதிகளில் இருப்பவர்கள் அனைவரும் பயணக்கட்டுப்பாடு விதிமுறைகளுக்கமையச் செயற்படுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவேளை முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளி பேணாமை தொடர்பில் கடந்த சனிக்கிழமை மாத்திரம் 71 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவருமே நீர்கொழும்பு, பேலியகொட மற்றும் குளியாப்பிட்டி ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்களாவர். அதற்கமைய இதுவரையில் 465 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் மட்டுமன்றி நாட்டின் அனைத்து பகுதிகளிலும் வசிக்கும் நபர்கள் அனைவரும் உரிய சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடித்து செயற்பட வேண்டியது கட்டாயமாகும்.

தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் இருப்பவர்களும் இந்த சுகாதார விதிமுறைகளுக்கமைய செயற்பட்டாலோ, தேவையின்றி வீட்டை விட்டு வெளியேறுவதை தவிர்த்துக் கொண்டாலோ அந்த பகுதிகளையும் வழமைக்கு கொண்டுவர முடியும். – என்றார்.

# பொறுப்பிலிருந்து அரசு தப்பித்துவிட முடியாது!

## இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு



வைரஸ் தொற்றில் சிக்கி மக்கள் அல்லோலப்படும் போது அதனை சுயநல அரசியலுக்காக பயன்படுத்துவது அநாகரிகமானது. மக்கள் துன்பங்களை அனுபவிக்கும் போது அவர்களுக்கு உதவி வேண்டியது அரசாங்கத்தின் கடப்பாடாகும். இந்த பொறுப்பிலிருந்து தப்பித்து விட அரசாங்கத்தால் இயலாது என முன்னாள் பிரதியமைச்சர் பெ.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்தும் கூறுகையில் –

கொவிட் – 19 வைரஸ் தொற்றில் சிக்கி மக் கள் அல்லோலப்படும் போது அதனை சுயநல அரசியலுக்காகப் பயன்படுத்துவது நாகரிகமான விடயமல்ல. அமைச்சர் விமல் வீரவன்ஸ 5 ஆயிரம் ரூபாவால் ஒரு மாதம் வாழ்ந்து விடலாம், அத்தொகை போதுமானது என்ற கருத்துடன் பேசியமை மிகவும் கவலையளிக்கிறது.

ஏனெனில் அவர் அரசியலுக்கு வருவதற்கு முன்னர் மிகவும் எளிமையான குடும்பத்தைச் சேர்ந்தவர். அவ்வாறானதொருவர் மக்கள் துன்பங்களை உதாசீனம் செய்கின் றமை போல் பேசுகின்றமை ஏற்புடையதல்ல.

மக்கள் துன்பங்களை அனுபவிக்கும் போது அவர்களுக்கு உதவ வேண்டியது அரசாங்கத்தின் கடப்பாடாகும். அந்த பொறுப்பிலிருந்து சுயநல அரசியலை காரணம் காட்டி யாரும் தப்பித்து விட இயலாது.– என்றார்.

# கனேடிய உயர் விருது இலங்கைத் தமிழருக்கு!

கனடிய பாதுகாப்புப் படையில் 22 ஆண்டுகள் நற்பணி ஆற்றியமைக்காக, கனேடிய பாதுகாப்புப் படைத் தலைமையக முதுநிலை நிதியியல் நிர்வாகியும் இலங்கைத் தமிழரான மதியாபரணம் வாகீசன் கனடிய உயர் விருதை பெற்றுள்ளார்.




கனடாவின் உயர் மதிப்புறு விருதான Canadian Forces' Decoration (CD) First Clasp என்ற விருதை அவருக்கு வழங்கி, பாராட்டி கௌரவித்துள்ளனர்.

யாழ்.இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான மதியாபரணம் வாகீசனுக்கு (1988 ஆம் ஆண்டு உயர்தரம்) கல்லூரி நிர்வாகம் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளது.

குறித்த உயர்மதிப்பைப் பெற்றுக்கொண்ட முதல் இலங்கைத் தமிழ் கனேடியர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தீவிரமடையும் நிவர் புயல்!



நிவர் புயல் இன்று (செவ்வாய்க்கிழமை) மாலை தீவிர புயலாக வலுப்பெறும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் –

தமிழகம், புதுச்சேரியை அச்சுறுத்தும் நிவர் புயல் வங்கக்கடலில் உருவானது.

வங்கக்கடலில் நிலைகொண்டிருந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் நிவர் புயலாக வலுப்பெற்றுள்ளது.


சென்னைக்கு கிழக்கே சுமார் 470 கி.மீ. தொலைவில் நிவர் புயல் மையம் கொண்டுள்ளது. இது இன்று மாலை தீவிர புயலாக வலுப்பெறும்.

மாமல்லபுரம் – புதுச்சேரி இடையே நாளை மாலை தீவிர புயலாக நிவர் புயல் கரையை கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நிவர் புயலின் காரணமாக புதுச்சேரி, காரைக்காலில் உள்ள அரசு, தனியார் பாடசாலைகளுக்கு மறு உத்தரவு வரும்வரை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இதனப்படி தரம் 9 – 12 வகுப்பு மாணவர்களுக்கு மேற்படி விடுமுறை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் மூன்று நாடுகளுக்கு சுற்றுப்பயணம்



வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் ஆறு நாட்கள் பயணமாக பஹ்ரைன், ஐக்கிய அரபு இராச்சியம் உள்ளிட்ட நாடுகளுக்கு இன்று பயணமாகவுள்ளார்.

அமைச்சரான பின்னர், முதன்முறையாக பஹ்ரைன் செல்லும் அவர், இருதரப்புப் பிரச்சினைகள் தொடர்பாகவும் பேச்சு நடத்துவார் என வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அதனைத் தொடர்ந்து ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு செல்லும் ஜெய்சங்கர், கொரோனாவால் பாதிக்கப்பட்ட இந்தியத் தொழிலாளர்கள் மீண்டும் பணியாற்றுவதற்கான சூழ்நிலை தொடர்பாகப் பேசவுள்ளார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறுதியாக செஷல்ஸ் தீவுகளுக்குச் செல்லும் அவர், இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் வகையில் பேச்சு நடத்துவார் என வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அசாம் முன்னாள் முதலமைச்சர் தருண் கோகாய் காலமானார்!



அசாம் மாநில முன்னாள் முதலமைச்சர் தருண் கோகாய் காலமானார். அவருக்கு வயது 86. கொரோனா பாதிப்பில் இருந்து அண்மையில் மீண்ட அவருக்கு மீண்டும் உடல் நலக்குறைவு ஏற்பட்டதால் நவம்பர் 2 ஆம் திகதி கவுகாத்தி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

அவரது உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்திருந்த நிலையில், மாலையில் உயிர் பிரிந்துவிட்டதாக சுகாதாரத்துறை அமைச்சர் ஹிமந்த பிஸ்வா சர்மா அறிவித்தார். தருண் கோகாய் மறைவுக்கு பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

காங்கிரஸின் மூத்த தலைவராக விளங்கிய தருண் கோகாய், அசாமில் தொடர்ந்து 15 ஆண்டுகள் முதலமைச்சராக பதவி வகித்த பெருமைக்குரியவர் ஆவார்.

# பேரறிவாளன் பிணை காலம் மேலும் நீடிப்பு!



முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் தண்டனை அனுபவித்து வரும் பேரறிவாளனின் பிணை மேலும் ஒரு வாரத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது.

தன்னை விரைந்து விடுதலை செய்யுமாறு கோரி பேரறிவாளன் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். அந்த வழக்கு நேற்று (திங்கட்கிழமை) விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டது.

இதன்போது வழக்கின் விசாரணையை ஒத்திவைத்த நீதிபதிகள், பேரறிவாளனின் பிணை காலத்தை மேலும் ஒருவாரத்துக்கு நீடித்து உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

அத்துடன் அவர் சிகிச்சைக்கு செல்லும்போது பொலிஸ் பாதுகாப்பு வழங்கவும் நீதிபதிகள் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

இதேவேளை பேரறிவாளனை விடுதலை செய்யுமாறு பல்வேறு தரப்பினர் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சந்தேகநபர் சுட்டுக் கொலை!

பாகிஸ்தானில் இருந்து இந்தியாவுக்குள் நுழைய முயன்ற சந்தேகத்துக்கிடமான நபர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

காஷ்மீரின் சம்பா மாவட்டத்தில் எல்லை பாதுகாப்புப் படையினர் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது, மர்ம நபர் ஒருவர், பாகிஸ்தானில் இருந்து, சர்வதேச எல்லையைக் கடந்து, இந்திய எல்லைக்குள் நுழைய முயன்றுள்ளார்.

இதையடுத்து அவரை நிற்கும்படி பாதுகாப்புப் படையினர் எச்சரித்தும் அவர் செவி சாய்க்காததால் அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகவும், அதில் அவர் உயிரிழந்தார் எனவும் பி.எஸ்.எப். விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நடிகை விஜயசாந்தி மீண்டும் பா.ஜ.கவில் சேரத் திட்டம்!



நடிகை விஜயசாந்தி விரைவில் பாரதிய ஜனதா கட்சியில் இணைய உள்ளார் எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

தற்போது காங்கிரஸில் இருக்கும் அவர் கடந்த சில மாதங்களாக எந்த நிகழ்ச்சியிலும் பங்கேற்காமல் உள்ளார். இந்நிலையில், உள்துறை அமைச்சர் அமித் ஷா முன்னிலையில் அவர் பா.ஜ.கவில் இணையவிருப்பதாகக் கூறப்படுகிறது.

பா.ஜ.கவில் இருந்த அவர், பின்னர் டிஆர்.எஸ், காங்கிரஸ் கட்சிகளுக்கு சென்றுவிட்டு மீண்டும் பா.ஜ.கவுக்கே திரும்பத் திட்டமிட்டுள்ளார்.

# இந்திய, பூட்டான் எல்லையில் சீனா அமைத்துள்ள வெடிமருந்து கிட்டங்கி

இந்திய, பூட்டான் எல்லையில் உள்ள டோக்லாம் அருகே சீனா மிகப்பெரிய அளவில் வெடிமருந்து கிட்டங்கி அமைத்துள்ள படங்கள் வெளியாகி உள்ளன.

இதுதொடர்பில் வெளியிடப்பட்டுள்ள செயற்கைக்கோள் படத்தில், சிஞ்சோ லா கணவாயில் இருந்து சுமார் 2 கிலோ மீற்றர் தூரம் ஊடுருவியுள்ள சீனப் படைகள் அங்கு பதுங்கு குழிகள், வெடிமருந்துகிட்டங்கிகள் போன்றவற்றை அமைத்துள்ளன.

டோக்லாமில் இந்தியாவுக்கும், சீனாவுக்கும் இடையே மீண்டும்மோதல் ஏற்பட்டால் அதனைச் சமாளிக்கும் வகையில் சீனா செயற்பட்டு வருவதாக இந்திய இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் பங்டா என்ற கிராமத்தை உருவாக்கியுள்ள சீனா அதற்காக சாலை வசதிகளையும் அமைத்துள்ளதும் செயற்கைக் கோள் படத்தில் தெரியவருவதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.



# கர்நாடகவில் திருமண கோலத்தில் தேர்வெழுத சென்ற மணமகள்!

கர்நாடக மாநிலம் குடகில் திருமணம் முடிந்த கையோடு திருமணக் கோலத்தில் வந்த மணமகள் ஒருவர், வங்கிப் போட்டி தேர்வு எழுதிய சம்பவம் நடந்துள்ளது.

கர்நாடக மாநிலம், குடகு மாவட்டம் மடிகேரி தாலுகா அசோக்புரா கிராமத்தைச் சேர்ந்தவர் சுவாதி. கல்லூரி படிப்பை முடித்த இவர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கான போட்டித் தேர்வுக்கு ஒன்பது மாதங்களுக்கும் மேலாகத் தயாராகி வந்தார். இந்த நிலையில் இவருக்கும், சுண்டிகொப்பா அருகே மதிகாமா கிராமத்தைச் சேர்ந்த சுரேஷ் என்பவருக்கும் திருமணம் நிச்சயமானது. அதன்படி ஞாயிற்றுக்கிழமையன்று சுவாதிக்குத் திருமணம் நடைபெற்றது.

இதில் சுவாரசியம் என்னவென்றால், சுவாதிக்குத் திருமணத்தன்று தான் போட்டித் தேர்வு எழுதவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. போட்டித் தேர்வு தொடர்பாகத் தனது கணவர் மற்றும் குடும்பத்தாரிடம் தெரிவித்து, தேர்வெழுத அனுமதி வாங்கினார்.

அதன் படி, திருமணம் முடிந்த கையோடு, மணமகள் சுவாதி திருமணக் கோலத்தில் போட்டித் தேர்வு எழுதுவதற்கு மடிகேரியில் உள்ள ஜூனியர் கல்லூரிக்குச் சென்று தேர்வெழுதினார். திருமணக் கோலத்தில் தேர்



வெழுதிய சுவாதியை சக தேர்வாளர்கள் ஆச்சரியத்துடன் பார்த்தனர். தேர்வெழுதி முடித்ததும் தனது கணவருடன் புறப்பட்டுச் சென்ற சுவாதி, 'கடந்த 9 மாதங்களாகப் போட்டித் தேர்வுக்குத் தயாராகி வருகிறேன். திருமணத்தால் நான் பட்ட கஷ்டத்துக்குப் பலன் இல்லாமல் போய்விடக்கூடாது என்பதற்காகத் தேர்வு எழுத குடும்பத்தாரிடம் அனுமதி பெற்றேன்.

போட்டித் தேர்வுக்காகத் திருமண நிகழ்ச்சிகளை எளிமையாக, விரைவாக நடத்தி முடித்தோம். தேர்வைச் சிறப்பாக எழுதியுள்ளதால், நிச்சயம் வெற்றிபெறுவேன்' என்று நம்பிக்கையுடன் தெரிவித்துள்ளார்.


## கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை



| மணமகள் விவரம் | மணமகள் விவரம் |
|---|---|
| பிறந்த திகதி - 1979.04.15 | பிறந்த திகதி - 1975.05.14 |
| மதம் - இந்து V | மதம் - இந்து V |
| நட்சத்திரம் - விசாகம் 2 | நட்சத்திரம் - திருவாதிரை |
| பாவம் - 15 | பாவம் - 38 |
| செவ் - 01இல் | செவ் - ----- |
| கல்வி - A/L | கல்வி - பட்டதாரி |
| தொழில் - UK PR | தொழில் - ஆசிரியை |
| எதிர்பார்ப்பு - படித்த அழகான பெண் | எதிர்பார்ப்பு - அரச உத்தியோகம் |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

077 3434 415
077 8578 528

# இன்னமும் உண்மையான விடுதலை இல்லை: சுதந்திர தினத்திலும் லெபனானில் போராட்டம்!

லெபனானில் சுதந்திர தினத்திலும், தலைநகர் பெய்ரூட்டில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடி போராட்டம் நடத்தியுள்ளனர்.

நாட்டின் 77ஆவது சுந்திர தினமான நேற்றுமுன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) கொரோனா வைரஸ் தொற்று, அரசியல் பிளவு, பொருளாதார வீழ்ச்சி மற்றும் ஒகஸ்ட் மாதம் பெய்ரூட்டின் துறைமுக குண்டுவெடிப்பு என அடுத்தடுத்த சம்பவங்கள் அந்நாட்டு மக்களை உலுக்கியமையால், சுதந்திர தினத்துக்கான பல தேசிய கொண்டாட்டங்கள் இரத்து செய்யப்பட்டன.

இருந்தபோதிலும், பல சுதந்திர அரசியல்வாதிகளின் கல்லறைகளில் மாலை அணிவிக்கப்பட்டன, அதே நேரத்தில் இராணுவத் தளபதி தலைமை ஜென ரல் ஜோசப் அவுன் லெபனான் இராணுவ தியாகி களின் நினைவு சிலைக்கு மாலை அணிவித்தார்.

இந்நிலையில், நாட்டின் அரசியல் தலைமையை நிராகரிக்கும் மக்கள், லெபனானின் பொருளாதார, நிதிச் சிக்கல்களுக்கு அரசியல் தலைவர்களைக் குற்றம் சாட்டி நகர வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டங்களில்



ஈடுபட்டனர்.

இன்னமும் உண்மையான விடுதலை நாட்டு மக்களுக்குக் கிடைக்கவில்லை என போராட்டக்காரர்கள் குறிப்பிட்டனர்.

ஏறத்தாழ 68.5 லட்சம் மக்கள் வசித்துவரும் லெபனானில், 1975 - 1990 உள்நாட்டுப் போருக்குப் பின்னர் ஏற்பட்ட மோசமான பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க லெபனான் தலைவர்கள் மீது பிரான்ஸ் அழுத் தம் கொடுத்த போதிலும் லெபனான் அரசாங்கத்தை அமைப்பதற்கான முயற்சிகள் தோல்வியடைந்தன.

ஒகஸ்ட் 4 ஆம் திகதி பெய்ரூட் துறைமுக குண்டு வெடிப்பைத் தொடர்ந்து ஹசன் டயப் தலைமையிலான கடந்த அரசாங்கம் இராஜினாமாச் செய்த பின்னர், பெர்லினின் முன்னாள் தூதராக இருந்த ஆடிப், ஒகஸ்ட் 31ஆம் திகதி பிரதமராக பொறுப்பேற்றார்.

அவருக்குப் பணிக்கு அமர்த்தப்பட்ட கிட்டத்தட்ட ஒரு மாதத்துக்குப் பிறகு, பாகுபாடற்ற அமைச்சரவையை வரிசைப்படுத்துவதற்கான முயற்சிகள், சிக்கலில் முடிந்த நிலையில், தனது பதவியை இராஜினாமா செய்தார். தற்போது புதிய பிரதமராக சாட் ஹரிரி பதவி வகிக்கிறார்.

இதனிடையே 2020 ஆம் ஆண்டின் இறுதியில் லெபனானில் அரைவாசி மக்கள் உணவுப் பஞ்சத்தைச் சந்திக்கும் அபாயம் உள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் மேற்கு ஆசிய பொருளாதார மற்றும் சமூக ஆணையகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# தனது புதிய அமைச்சரவையை வெளியிட்டுள்ளார் ஜோ பைடன்!



அமெரிக்க அதிபராகப் பதவியேற்க உள்ள ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த, ஜோ பைடன், தனது அமைச்சரவையில் இடம்பெறக் கூடியவர்கள் பெயர் பட்டியலை அறிவித்துள்ளார்.

அதன்படி, வெளியுறவுத் துறை அமைச்சராக ஆன்டனி பிளின்கென், வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பதவிக்கு ஜாக் சல்லிவன் ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். முன்னாள் அமெரிக்க தலைமை தூதர் ஜான் கெர்ரி ஜோ பைடனின் சிறப்பு தூதராகவும், உள்நாட்டு பாதுகாப்புத் துறை அமைச்சராக அலெஜான்ட்ரோ மயோர்காசும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் துணை சிஐஏ இயக்குநரான அவ்ரில் ஹைன்ஸை தேசிய புலனாய்வு இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் அமைச்சரவை உறுப்பினர் அந்தஸ்துடன், லிண்டா தாமஸ் - கிரீன்ஃபீல்ட் ஐக்கிய நாடுகள் சபையில் தனது தூதராக பணியாற்ற பரிந்துரைக்கப்படுவார் என்று ஜோ பைடன் தெரிவித்தார்.

# உலகளவில் கொரோனா உயிரிழப்பு எண்ணிக்கை 14 லட்சம் கடந்தது!

உலகளவில் கொரோனா வைரஸ் (கோவிட் -19) பெருந் தொற்றால், மொத்தமாக இதுவரை 14 லட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

அண்மைய உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்களின் படி, உலகில் மொத்தமாக 14 லட்சத்து 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் இதுவரை மொத்தமாக ஐந்து கோடியே 95 லட்சத்து 13ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வைரஸ் தொற்றால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

இதுதவிர தற்போதுவரை 4 கோடியே 11லட்சத்து 53 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வைரஸ் தொற்றிலிருந்து மீண்டு வீடுதிரும்பியுள்ளனர்.

உலகளவில் கோவிட் - 19 தொற்றால் அதிக பாதிப்பு மற்றும் உயிரிழப்பை சந்தித்த நாடாக அமெரிக்கா விளங்குகின்றது.

அமெரிக் காவில் இது வரை ஒரு கோடியே 27 லட்சத்துக்கும் மேற்பட்டோர் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். இரண்டுலட்சத்து 63 ஆயிரத்துககும் மேற்பட்டோர் உயிரிழந்துள் ளனர்.

# ரோமப் பேரரசின் ஆண்டான் அடிமை எரிமலை சாம்பலில் கண்டுபிடிப்பு!



பண்டைய ரோமப் பேரரசின் பாம்பேய் நகரத்தை அழித்த வெசுவியஸ் என்ற எரிமலையில் சிக்கி இறந்த இரண்டு மனிதர்களின் உடல் எச்சங்களைத் தொல்பொருள் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இந்த உடல்கள் அக்கால எஜமான் - அடிமையின் உடலாக இருக்கலாம் என்று ஆய்வா ளர்கள் தெரிவித்துள்ளனர்.

கி.பி 79 இல் வெசுவியஸ் எரிமலை சீற்றத்தால் பாம்பேய் நகரம் மற்றும் அங்குக் குடியிருந்தவர்கள் அனைவரும் எரிமலை சாம்பல் மற்றும் லாவா குழம்பில் புதைந்தனர். தற்போது இந்த இடம், தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களுக்கு ஒரு வளமான ஆதாரமாக மாறிவருகிறது. பண்டைய பாம்பேய் நகரின் மையத்திலிருந்து 700 மீற்றர் வடமேற்கே உள்ள சிவிடா கியுலியானாவில் அகழாய்வு செய்த போது, எரிமலை சீற்றத்தில் சிக்கிய இரண்டு உடல்களின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இருவரும் எரிமலை சீற்றத்திலிருந்து தப்பி ஒதுங்கியபோது சாம்பல் மற்றும் லாவா குழம்புகளால் அடித்துச் செல்லப்பட்டவர்களாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. அவர்களின் பற்கள் எலும்புகள் ஆகியவை அப் படியே பாதுகாப் பாக உள்ளன.

அதில் ஒருவர், செல்வந்தராகவும் உயர்ந்த அந்தஸ்தைக் கொண்டிருப்பவராக 30 முதல் 40 வயதுக்கு உட்பட்டவராக இருக்கலாம் என்றும் அவரது கழுத்துக்குக் கீழே கம்பளியின் தடயங்கள் காணப்படுகின்றன. மற்றவர் ஓர் ஆடை மட்டும் அணிந்த 18 - 23 வயதுக்குட்பட்ட அடிமையாக இருக்கலாம் என்று தொல்பொருள் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். அடிமையின் முதுகெலும்பு கள் அதீத உழைப்பு காரணமாக பாதிக்கப்பட்ட வண்ணம் காணப்படுகின்றன.

இது தொடர்பாக பாம்பேய் தொல்பொருள் பூங்காவின் இயக்குநர் மாசிமோ ஒசன்னா, 'இது வெப்ப அதிர்ச்சியால் ஏற்பட்ட மரணம். இறுதி இருக்கும் அவர்களின் கால்களும், கைகளும் அதை நிரூபிக்கின்றன. எரிமலைச் சீற்றம் நடந்த தற்கான, மலைக்க வைக்கக்கூடிய மற்றும் அசாதாரணமான சாட்சியம் இது' என்று தெரிவித்துள்ளார்.

தற்போது, நேபிள்ஸ் என்கிற இடத்தில் உள்ள அகழ்வாராய்ச்சி தளத்தில், தொடர்ந்து தொல்பொருள் ஆராய்ச்சிகள் நடந்து கொண்டு இருக்கின்றன. எரிமலையால் அழிந்து போன பாம்பேய் நகர இடிபாடுகள் 16 ஆம் நூற்றாண்டு வரை கண்டுபிடிக்கப்படாமல் இருந்தது. பிறகு, 1750 ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்று வரும் அகழாய்வு பணிகள் மூலம் வெளிவருவது குறிப்பிடத்தக்கது.

# உலகின் 2 ஆவது பணக்காரர் டெஸ்லா அதிபர் எலான் மஸ்க்!



நிகர சொத்து மதிப்பு ஒன்பது லட்சத்து 46 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்ததை தொடர்ந்து, உலகின் நம்பர் 2 பணக்காரராக டெஸ்லா அதிபர் எலான் மஸ்க் முன்னேறி உள்ளார்.


டெஸ்லாவின் பங்குகள் உயர்ந்ததே இதற்கு முக்கிய காரணம்.

எலான் மஸ்கின் சொத்து மதிப்பு உயர்ந்ததை அடுத்து இரண்டாம் இடத்தில் இருந்த மைக்ரோசாப்ட் இணை நிறுவனர் பில் கேட்ஸ் 3 ஆம் இடத்துக்குச் சென்றுள்ளார்.

2017 இல் அமேசான் நிறுவநர் ஜெப் பிசோஸ் முதலிடத்திற்கு வரும் வரை பல ஆண்டுகள் பில் கேட்ஸ் நம்பர் ஒன் பணக்காரராக இருந்தார்.

# 200 கோடி கொரோனா தடுப்பூசி அடுத்த ஆண்டு ஏழை நாடுகளுக்கு!

யுனிசெவ் திட்டவட்டம்





2021ஆம் ஆண்டு சுமார் 200 கோடி கொரோனா தடுப்பு மருந்துகள் ஏழை நாடுகளுக்கு வழங்கப்படும் என்று யுனிசெவ் தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தான், ஏமன் மற்றும் புருண்டி உள்ளிட்ட நாடுகளுக்கு வழங்கப்படும் என்றும், மருந்தை எடுத்துச் செல்ல 350 விமான நிறுவனங்களுடன் பேச்சு நடத்தியிருப்பதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

கொரோனா தடுப்பூசி கண்டுபிடிக்கும் பணியில் அமெரிக்கா, ரஷ்யா, இந்தியா இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

# அமெரிக்க இசை விருது விழாவில் சிறந்த இசைக் கலைஞர் விருது 6 ஆவது முறையும் டெய்லருக்கு!




அமெரிக்க இசை விருதுகள் விழாவில், ஆண்டின் சிறந்த இசைக் கலைஞருக்கான விருதை 6 ஆவது முறையாக வென்று பிரபல பொப் பாடகி டெய்லர் ஸ்விப்ட் சாதனை படைத்துள்ளார். ரசிகர்கள் அளிக்கும் வாக்குகளின் அடிப்படையில் வழங்கப்படும் இந்த விருது விழா, லாஸ் ஏஞ்சலஸ் நகரில் கலைநிகழ்ச்சிகளுடன் ஆரம்பமாகியது.

இந்த விழாவில் 'ஃபோக்லோர்' என்ற அல்பத்துக்காக சிறந்த இசைக் கலைஞர் உட்பட 3 விருதுகளை டெய்லர் ஸ்விப்ட் தட்டிச் சென்றார். இதே போன்று பிரபல பொப் பாடகர் ஜஸ்டின் பைபர், கனடாவைச் சேர்ந்த வீக்கெண்ட் இசைக்குழு, தென்கொரியாவின் பிடிஎஸ் இசைக்குழுவினரும் பல்வேறு விருதுகளை வென்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


பேராசிரியர் எஸ். அன்ரனி நோர்பேட்





# வட இலங்கைக்கு வட கிழக்கில் வங்கக் கடல் 'நிவர்' சூறாவளி!

இலங்கையின் காலநிலையில் தென்மேல் 'மொன்சூன்'கால மழைவீழ்ச்சி மே மாதம் தொடக்கம் செப்ரம்பர் மாதம் வரையில் இடம்பெறுகின்றது. ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்கள் இடைக்கால மொன்சூன் பருவமாகக் காணப்படும். டிசம்பர் தொடக்கம் பெப்ரவரி வரை இலங்கையில் வட கீழ் மொன்சூன் பருவகாலமாகக் கருதப்படும். இலங்கையின் மழைவீழ்ச்சி நிலையங்களில் இருந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வுகளின் படி இப்பருவ காலங்கள் வரையறுக்கப்பட்டு இருந்தாலும் கடந்த சில தசாப்தங்களாக ஏற்பட்டு வரும் பூகோள ரீதியான காலநிலை மாற்றங்களினாலும் 'எல்நினோ'வின் பாதிப்பினாலும் இப்பருவ காலங்களில் முன்னுக்கும் பின்னுக்குமான நகர்வுகளை அவதானிக்க முடிகின்றது.

ஒரு பிரதேசத்தின் வானிலை மற்றும் காலநிலையை நிர்ணயிப்பதில் வளிமண்டல அமுக்கம், படிவுவீழ்ச்சி, காற்று, ஞாயிற்றுக் கதிர்வீசல், முகில் ஆகிய வானிலை மூலகங்கள் முக்கிய பங்கினை வகிக்கின்றன. ஞாயிற்றுக் கதிர் வீசலின் தாக்கத்தினால் புவியின் மத்திய பகுதியில் ஏற்படும் தாழமுக்கம் காரணமாக வியாபாரக் காற்றுக்கள் அல்லது மொன்சூன் காற்றுக்கள் இப்பகுதியில் ஒருங்குவதை அல்லது ஒன்று சேர்வதைக் காணலாம். இவ்வாறு மொன்சூன் காற்றுக்கள் ஒன்று கலக்கும் பகுதி ஆயிரம் மைல் அகலமான ஒரு வலயமாககக் காணப்படும்.

மத்திய கோட்டுக்கு வடக்காக 25 பாகை வட அகலக் கோடு வரை நகரும் இவ் வலயம் வட ஒருங்கல் வலயம் எனவும், தெற்காக 15 பாகை தென் அகலக் கோடு வரையும் நகரும் வலயம் தென் ஒருங்கல் வலயம் எனவும் அழைக்கப்படும். எனவே இவ் வலயம் ஏறக்குறைய 40 பாகை வரை அகலக்கோட்டு நகர்வினைக் கொண்டுள்ளது. இவ்வலயத்தின் வடக்கு, தெற்கு நோக்கிய பெயர்வின் போது இலங்கை எக்காலத்திலும் அதனுள் இருப்பதனால் அதன் தாக்கத்திற்கு உள்ளாவது தவிர்க்க முடியாது. தீவின் மேலாக இவ்வலயம் செல்லும் போது கடும் காற்றுக்களும் அதிகளவான மழைவீழ்ச்சியும் கிடைக்கும். வானம் இருண்டதாகக் காணப்படும். இதனால் தீவின் காலநிலையில் இவ்வலயம் செல்வாக்குச் செலுத்துவதாக இருக்கின்றது. ஞாயிற்றின் இடப்பெயர்விற்கு ஏற்ப மத்திய கோட்டில் வடக்காகவும், தெற்காகவும் இவ்வலயம் நகர்வதனால் நிலையற்றதாக உள்ளது. இந்து சமுத்திரத்திலும் மேற்கு பசுபிக்கின் பெரும்பகுதியிலும், மத்திய கோட்டு ஆபிரிக்காவின் கிழக்குக் கரை வரையும் பரந்து காணப்படும் இவ்வலயம் பத்தாயிரம் மைல்கள் நீளமானதாகவும் அமைந்துள்ளது.

இலங்கையில் மார்ச், ஏப்ரல் மாதங்களில் இடை அயன ஒருங்கல் வலயத்தின் வடக்குப் பக்கமான பெயர்வின் போது மழைவீழ்ச்சி கிடைக்கின்றது. மார்ச், ஏப்ரலின் பின்னர் இவ்வலயம் வடக்கு நோக்கி நகரும் போது மே மாதக் கடைசியில் தென்மேல் மொன்சூன் காற்று பரந்த சமுத்திரத்தைக் கடந்து வந்து இலங்கையின் தென்மேற்குக் கரையோரத்தை அடைகின்றது. இக்காலத்தில் காலை வேளைகளில் கரையோரப் பகுதியில் மழைத்தூறல்கள் விழுவதைக் காணலாம். இவ் ஒருங்கல் வலயத்தின் செல்வாக்கினால் உள்ளூர் வெப்பநிலையில் மாற்றங்கள் ஏற்படும். இடி மின்னல்களும் மழையும் மார்ச், ஏப்ரல் பருவத்தில் காணப்படும். இக்காலத்தில் இலங்கையின் தென்மேல் பகுதி 300 மில்லி மீற்றருக்கு மேற்பட்ட மழையைப் பெறுகின்றது. இலங்கையின் காலநிலையில் இவ் ஒருங்கல் வலயத்தின் தாக்கம் பற்றி 'சிறிநந்தா' மற்றும் 'ஜெயமகா' போன்றோர் தமது ஆய்வுளில் எடுத்துக் காட்டியுள்ளனர். இலங்கைக்கு மேலாக செறிவான முகிற் கூட்டங்களுடன் இணைந்த இவ்வலயம் சராசரியாக 75 - 150 கிலோ மீற்றர் அகலம் கொண்டதாக இருக்கின்றது. இலங்கையின் எதிர்காலக் காலநிலையை எதிர்வு கூறுவதற்கு இவ்வாறான அமைவிடம் மற்றும் நகர்வுகள் பற்றிய தரவுகள் மிக முக்கியமானவை.




மே தொடக்கம் செப்ரெம்பர் வரையான காலத்தில் இடை அயன ஒருங்கல் வலயத்தின் தாழமுக்கப் பகுதி வடக்கு நோக்கி நகரும்போது அத் தாழமுக்கத்தை நோக்கி தென்மேல் மொன்சூன் காற்று இழுக்கப்பட்டு இலங்கைக்கு மேலாக வடக்கு நோக்கிச் செல்கின்றது. இக் காற்று இரு கிளைகளாகப் பிரிந்து ஒன்று அராபியன் கடற் கிளையாக கொன்கான், மலபார் கரைகளை அடைகின்றது. மற்றையது வங்காளவிரிகுடாக் கிளையாகச் சென்று அரக்கன்யோமா மலைகளால் தடுக்கப்பட்டு கங்கைச் சமவெளி ஊடாக நகர்கின்றது. இத்தகைய நகர்வுகளினால் தென்மேல் மொன்சூனின் அதிகளவான மழைவீழ்ச்சி இந்தியாவின் மேற்கு மலைப் பகுதிக்கும், அசாம், மற்றும் இமயமலையின் தாழ் பகுதிச் சாய்வுகளிலும் கிடைக்கின்றது. செம்ரெம்பரின் மத்திய பகுதியில் மழை குறைந்து செல்லும் நிலையை அடைகின்றது. ஒக்டோபரில் வானம் தெளிவாகவும் வெப்பநிலையில் சிறிது அதிகரிப்பும் இந்திய தீபகற்பப் பகுதியில் ஏற்படும். செப்ரெம்பரின் நடுப் பகுதியிலிருந்து டிசம்பர் வரை மொன்சூன் பின்வாங்கும் காலமாகும்.

சமுத்திரத்தின் மேலாகக் காணப்படும் வளிமண்டல அமுக்க மாற்றத்தின் காரணமாக இப் பின்வாங்கல் ஏற்படுகின்றது. வளிமண்டலச் சுற்றோட்டத்தில் இதன் பின்னர் ஏற்படும் பின்னடைவு காரணமாக ஒருங்கல் வலயம் உப கண்டத்திலிருந்து விலகி மத்திய கோட்டுப் பக்கமாக நகர்கின்றது. இதன் பின்னர் வட கீழ் மொன்சூன் காற்று ஆரம்பிக்கின்றது. தென்மேல் மொன்சூனில் ஏற்படும் சிறிய பின்னடைவுகள் மிகக் கடுமையான பின்விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவை. மொன்சூன் காற்றுக்கள் சில இடங்களில் பிந்துவதாலும் அல்லது குறிப்பிட்ட காலத்துக்கு முன்னர் பின்வாங்குவதாலும் பாரிய பிரச்சினைகள் ஏற்படுகின்றன. கோடைகாலப் பயிர்கள் மாத்திரமன்றி மாரிகாலப் பயிர்களும் இதனால் பெருமளவு பாதிக்கப்படுகின்றன. மழைவீழ்ச்சி தவறுமாக இருந்தால் பயிரழிவுகள் ஏற்படும். இதனால் பஞ்சமும் வறுமையும் கடந்த காலத்தில் ஏற்பட்டிருப்பதனைக் காணலாம். இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகள் கூட இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றன. இதனால் தான் 'டட்லி ஸ்ராம்' என்பவர் 'பஞ்சம் அல்லது வறுமை ஏற்படும் பகுதிகள் உண்மையில் வரட்சியான பகுதிகள் அல்ல. அவை இடைத்தர மழைவீழ்ச்சியைக் கொண்ட பகுதிகளே' எனக் குறிப்பிட்டார்.

நவம்பர், டிசம்பர் மாதங்களில் அயனச் சூறாவளிகள் வங்காள விரிகுடாவில் விருத்தியடைகின்றன. அவை மேற்கு மற்றும் வடமேற்குப் பக்கமாக நகர்வதைக் காணலாம். இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளையும், இந்தியாவின் கிழக்குக் கரைப் பகுதிகளையும் அவை தாக்கும் பொழுது கடும் மழைவீழ்ச்சியைக் கொடுப்பதுடன் பெரும் அழிவுகளையும் ஏற்படுத்தி விடுகின்றது. இப்பின்னணியில் வைத்துப் பார்க்கும் போது அயனச் சூறாவளியின் தாக்கங்கள் இக்காலத்திற்குரிய முனைப்பான அம்சங்களாகக் காணப்படுகின்றன. கடந்த நான்கு தசாப்தங்களுள் 1964, 1978, 1992 மற்றும் 2000 ஆகிய ஆண்டுகளில் நான்கு பாரிய சூறாவளிகள் இலங்கையைக் கடந்து சென்றன. (இலங்கை நில அளவைத் திணைக்களம், 2016). 1978 இல் மட்டக்களப்பினைத் தாக்கிய சூறாவளி மிகவும் மோசமானதாக இருந்தது. மணிக்கு 200 கிலோ மீற்றருக்கு மேற்பட்ட வேகத்தில் தாக்கியிருந்தது.



இரண்டாவது இடை மொன்சூன் பருவமாகிய இக்காலத்தில் வங்காள விரிகுடாவில் தாழ் அமுக்கங்களும், சூறாவளிகளும் ஆதிக்கம் செலுத்துகின்றன. இதனால் சில காலங்களில் கடும் காற்றுடன் கூடிய பரவலான மழைவீழ்ச்சி நாடு முழுவதும் கிடைக்கப்பெறுவதுடன் சில காலங்களில் வெள்ளப்பெருக்குகள் மற்றும் நிலச்சரிவுகளையும் ஏற்படுத்துகின்றன. மாலை வேளைகளில் இடிமின்னல், புயல் காற்று மழையையும் ஏற்படுத்துகின்றது. இந்நிலையில் 2020 நவம்பர் 21 ஆம் திகதியன்று தென் ஆசியச் சூழலில் அராபியன் கடலிலும், வங்காள விரிகுடாவிலும் இரண்டு தாழமுக்க மையங்கள் உருவாகியுள்ளதாக 'தென்னிந்தியாவின் தேசிய வானிலை எதிர்வு கூறல் மையம்' குறிப்பிட்டிருந்தது. முகில்களின் அம்சங்களையும் அவற்றின் வழித்தடங்களையும் துல்லியமாகப் பெற்று காலரீதியான வளிமண்டல அசைவினை மதிப்பிடும் 'இன்சாட்' - 3 செய்மதி மூலமான படிமங்களை ஆதாரமாகக் கொண்டு இத்தகவல்கள் வெளியிடப்பட்டன.

(07ஆம் பக்கம் பார்க்க)

# சுதந்திர வீரர்களை நினைவு கூருவதை தடுக்க முடியுமா?

## வலித்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் கேள்வி!

கொழும்பு, நவ. 24

தமிழ் இனத்தின் தேசிய வாழ்வு நிலைப்பதற்காக, தமது சொந்த வாழ்வை ஈகம் செய்த சுதந்திர வீரர்களை நினைவு கொள்வதை தடுக்க முடியுமா? என வடக்கு, கிழக்கு வலித்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

எங்கள் பிள்ளைகளை நாங்கள் நினைவிற்கொள்வதை எவரும் தடுக்கமுடியாது எனவும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பின் வடக்கு,கிழக்கு மாகாணங்களின் பணிப்பாளர் பத்மநாதன் கருணாவதி தெரிவித்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை கிளிநொச்சியில் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று காலை 10.30 மணியளவில் சோலைவனம் தனியார் விடுதியில் இடம்பெற்றது

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

எங்கள் வாழ்விற்காக வீர காவியமான எங்கள் பிள்ளைகளை நவம்பர் 27 இல் நினைவிற்கொள்வதை இன அழிப்பு மூலம் லட்சக்கணக்கான தமிழ் உயிர்களை காவுகொண்ட கோட்டா அரசாலும், அதன் கூலிப்படையாலும் தடுத்துவிட முடியாது.

சிங்கள இனவாத அரசு மேற்கொண்ட போரில் போராடி மடிந்த மாவீரர்களை நினைவிற்கொள்ளவிடாமல் தடுக்கும் நடவடிக்கையை நீதிமன்றம் ஊடாக மேற்கொண்டு வருகின்றது.

2009 இற்கு முற்பட்ட ஆண்டுகளில், நவம்பர் 27 ஆம் திகதி செய்தியை, உலகமே எதிர்பார்த்திருந்தது. ஏன் தென்னிலங்கையும் ஏதோவொரு செய்திக்காகக் காத்திருந்தது.

அந்த செய்தியை அடிப்படையாக வைத்தே, அடுத்தகட்ட நகர்வுகளுக்கான காய்கள் நகர்த்தப்பட்டன. அதுதான்



கடந்தகால உண்மை வரலாறு.

போரில் உயிர் இழந்தவர்களை நினைவு கொள்வதை தடுக்க எந்த நாட்டிலும் உரிமை இல்லாத நிலையில் தமிழர்களை அடக்கி, ஒடுக்க முனையும் சிங்கள பேரினவாத அரசுக்கும், அதன் ஏவல் படைகளுக்கும் தமிழர்களாகிய நாங்கள், ஒன்றைச் சொல்லிவைக்க விருப்புகின்றோம்.

எங்கள் பிள்ளைகளை நாங்கள் நினைவிற்கொள்ளாமல் வேறு யார் நினைவிற் கொள்வது? ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தை மீறும் இலங்கை அரசின் தமிழர்கள் மீதான அடக்குமுறையை உலகறியச் செய்வோம்.

சிங்கள இனத்தவர்களுக்கு ஒரு சட்டம், தமிழர்களுக்கு இன்னொரு சட்டம் என்ற நிலையில் புதிதாக பொறுப்பேற்றுள்ள கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது.

மே 19ஆம் திகதி உயிரிழந்த படையிருக்கான தேசிய நினைவுகூருதல் பெருமெடுப்பில் கொண்டாடப்படுகின்றது.

இலங்கையில் மரணித்த இந்திய இராணுவத்தினரும் நினைவு கூரப்படுகின்றனர். ஆகவே, கார்த்திகை வீரர்களும் (மாவீரர்கள்) நினைவு கூரப்பட வேண்டியவர்களே!

எங்கள் பிள்ளைகளை நாங்கள் ஆண்டுக்கு ஒரு தடவை நினைவிற்கொள்ளும் நவம்பர் 27 இல் எந்த தடையையும் எவரும் விதிக்கமுடியாது என்பதை, எங்கள் உறவுகள் நினைவாக நாங்கள் ஏற்றும் ஒவ்வொரு தீப சுடர்களும் சொல்லி நிற்கும்.

எனவே, நினைவேந்தலை அரசியலாக்கி, அதனூடாக குளிர்காய்வதற்கு இடமளிக்காது வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற அனைத்து தமிழ் உறவுகள் அனைவரும், எங்கள் தேசத்துக்காக உயிர் கொடுத்த உங்கள் பிள்ளைகளை, சகோதர சகோதரிகளை நவம்பர் 27 இல் நினைவு கூருவது ஒவ்வொரு தமிழர்களின் தார்மீக கடமையாகும்.

நாட்டில் உள்ள கொரோனா வைரஸ் தொற்றைக் கருத்திற்கொண்டு, பொது சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி, துயிலும் இல்லங்களில் மீளாத்துயிலில் இருக்கும் தத்தமது உறவுகளுக்கு விளக்கேற்றி, வணக்கம் செலுத்த முன்வரவேண்டும் என வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அமைப்பின் சார்பாக வேண்டி நிற்கின்றோம். – என அவர் தெரிவித்துள்ளார்.

## பல்கலைக்கழகத்துக்குத் தகுதிபெற்ற மாணவர்களுக்கான இணையப் பதிவு!

2019/2020 ஆண்டு பல்கலைக்கழகங்களுக்கு தகுதி பெற்றுள்ள மாணவர்கள் இணையத்தளத்தின் ஊடாக பதிவுகளை மேற்கொள்ளும் நடவடிக்கைநேற்று(23.11.2020) முதல் ஆரம்பமாகியுள்ளது.

மாணவர்கள் இணையத் தளத்தின் ஊடாக பதிவுகளை செய்வதற்கான நடவடிக்கைகள் நடைமுறையில் இருப்பதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இம்முறை 41 ஆயிரத்து 500 மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்கு தெரிவாகியுள்ளனர் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான விவரங்களை www.ugc.ac.lk என்ற இணையத்தளத்தில் அல்லது www.selection.ugc.ac.lk என்ற இணைத்தளத்திலோ பார்வையிட முடியும்.

## ஹெரோயின் போதை வைத்திருந்த பெண் உட்பட இரண்டுபேர் கைது!

நீர்கொழும்பு – கொச்சிக்கடை பகுதியில் ஹெரோயின் போதைப் பொருளுடன் பெண்ணொருவர் உட்பட இருவர் கைது செய்யப் பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித்ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் ஒலிப்பதிவொன்றை வெளியிட்டுள்ள அவர் மேலும் கூறியவை வருமாறு –

நீர்கொழும்பு – கொச்சிக்கடை பகுதியில் குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, ஹெரோயின் போதைப் பொருளுடன் பெண்ணொருவர் உட்பட இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது காரில் சென்றுகொண்டிருந்த சந்தேக நபர்களை தடுத்து நிறுத்திய பொலிஸார், காரை சோதனைக்குட்படுத்திய போது அதிலிருந்து 152 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்



கப்பட்டுள்ளது.

பங்கதெனிய மற்றும் வெரலவத்த ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 33 வயதுடைய பெண்ணும், 34 வயதுடைய ஆணொருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காகத் தனிமைப் படுத்தல் சட்டவிதிகள் கடைப்பிடிக்கப் பட்டு வருகின்ற நிலையில், ஒருசிலர் இந்த சந்தர்ப்பத்தை சட்டவிரோத செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தி வருகின்றனர். இது போன்ற செயற்பாடுகள் தொடர்பிலும் நாம் கவனம் செலுத்திக் கொண்டு தான் இருக்கின்றோம்.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ள இந்த சந்தேக நபர்கள் பயன்படுத்திய காரையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். இந்நிலையில் சந்தேக நபர்களை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தி, அவர்களை ஏழுநாள்கள் தடுப்பு காவலில் வைத்து விசாரணைக்குட் படுத்தவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. – என்றார்.

# வட இலங்கைக்கு வட கிழக்கில் .........

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய வளிமண்டலவியல் திணைக்களத்தின் படி இரண்டு தாழமுக்கங்களின் உருவாக்கம் எடுத்துக்காட்டப்பட்டது. தென்மேற்கு அராபியன் கடலில் 21 ஆம் திகதி உருவான ஆழமான தாழமுக்கம் ஒன்று மேற்கு, தென்மேற்குப் பக்கமாக ஆறு மணித்தியாலங்களாக 45 கிலோ மீற்றர் வேகத்தில் நகரத் தொடங்கியது. இது 'கற்றி' எனப்படும் சூறாவளியாகச் செறிவடைந்து 22 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை தென்மேற்கு அராபியன் கடலில் மையம் கொண்டிருக்கும் இப்புயல் 23 ஆம் திகதி திங்கட்கிழமையன்று சோமாலியக் கரையைக் கடக்கும் எனக் கூறப் பட்டது. செய்மதிப் படிமத்தில் இதனை அவதானிக்கலாம். காற்றின் வேகம் மணிக்கு 100 – 110 கிலோ மீற்றராக இருக்கும். சூறாவளியின் தோற்றப்பாடு இந்தியக் கரைகளுக்கு அப்பால் அமைந்திருப்பதனால் மோசமான வானிலைத் தாக்கங்கள் எதுவும் இந்தியாவிற்கு ஏற்படமாட்டாது.

இதேபோன்று, மேல் வளிமண்டல சுற்றோட்டங்களின் காரணமாக இலங்கைக்குக் கிழக்காகவும் தாழமுக்கப் பகுதியொன்று உருவாகியது. வங்காள விரிகுடாவில் அமுக்க இறக்கமாகச் செறிவடைந்து நவம்பர் 25 ஆம் திகதி தமிழ் நாட்டுக் கரையை நோக்கி மேற்கு, வடமேற்காக நகரும் என இந்திய வளிமண்டலத் திணைக்களம் அறிவித்துள்ளது. சென்னைக்குக் கிழக்காக 100 கிலோ மீற்றர் தூரத்தில் இது அமைந்துள்ளது. இதற்கு 'நிவர்' சூறாவளி எனப் பெயர் வழங்கப்பட்டுள்ளது. நிவர் என்பது 'வெளிச்சம்' எனப் பொருள்படும். ஈரானினால் இப் பெயர் வழங்கப்பட்டது.

2020 நவம்பர் 24, 25 அம் திகதிகளில் தமிழ்நாட்டில் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் 25, 26 ஆம் திகதிகளில் ராயல்சீமா மற்றும் ஆந்திரப் பிரதேச தென் மாவட்டங்களிலும் 26 ஆம் திகதி தெலுங்கானாவிலும் மழைவீழ்ச்சி மிகக் கடுமையாக இருக்கும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே 22 ஆம் திகதியிலிருந்து 25 ஆம் திகதி வரை மன்னார் குடா, புதுச்சேரி, தென் ஆந்திரப் பிரதேசங்களில் மீன் பிடிக்கக் கடலுக்குச் செல்ல வேண்டாம் என அறிவித்தல்கள் வழங்கப்பட்டன.

அத்துடன் நவம்பர் 25 ஆம் திகதி தமிழகத்தில் சிவப்பு எச்சரிக்கை வழங்கப் பட்டுள்ளது. இந்த நிவர் புயலின் காரணமாக இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் கடல் கொந்தளிப்பாகக் காணப்படும். புயல் வடமேற்கு நோக்கி இலங்கைப் பக்கமாக நகருவதனால் வட இலங்கைக்குப் பாதிப்புக்கள் இருக்கும். நவம்பர் 23 ஆம் திகதி முதல் தமிழ்நாட்டில் பரவலாக சென்னை, திருவாரூர், தஞ்சை, புதுக்கோட்டை, கடலூர் போன்ற பகுதிகளில் மழைவீழ்ச்சி கடுமையாக இருக்கும். நிவர் சூறாவளி நவம்பர் 25 ஆம் திகதி புதன் கிழமையன்று தமிழ்நாட்டுக் கரையில் காரைக்கால், மகாவலிபுரம் ஆகியவற்றினைக் கடக்கும் எனக் கருதப்படுகின்றது. பிராந்திய வானிலை அலுவலரின் தகவலின் படி தாழமுக்கம் சென்னைக்குத் தெற்காக 740 கிலோ மீற்றரில் மையம் கொண்டுள்ளது. கடலூர், சிதம்பரம் ஆகிய மாவட்டங்களுக்கு ஆறு தேசிய அனர்த்த மீட்புப் படை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நிவர் சூறாவளியின் காரணமாக வட இலங்கைக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இலங்கையின் வளிமண்டலத் திணைக்களம் வழங்கி உள்ள தகவலின்படி 100 – 150 மில்லி மீற்றர் மழை வட பகுதியின் பல இடங்களிலும் ஏற்படக் கூடும். செவ்வாய்க் கிழமையும், புதன் கிழமையும் சில சில இடங்களில் 150 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. புத்தளம் தொடக்கம் மன்னார் உள்ளடங்கலாக காங்கேசன்துறை, திருகோணமலை, மட்டக்களப்பு வரை கடலுக்குச் செல்ல வேண்டாம் என எச்சிரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எனவே செவ்வாய், புதன் மற்றும் வியாழன் ஆகிய கிழமைகளில் வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் மிக அவதானமாக இருக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.11.2020 இல் வெளியிடப்பெற்றது.